இணைப்பு II

(54ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 5845-க்கான விடையைக் காண்க.)

(அ) திருப்பூர் நல்லூர் நகரப் பஞ்சாயத்திற்குட்பட்ட சேரங் காடு, சோமனூர் ஆகிய ஊர்களிலுள்ள பொது மக்கள் குடி தண்ணீரின்றி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா ?

சேரன்கோடு குடியிருப்பு முத்தையநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்தது. வகை 3-ன் கீழ் அமைந்துள்ளது. இக்குடியிருப்பு தன்னிறைவுத் திட்ட மூன்றாம் கட்டத்தின் கீழ் குடிநீர் வசதி பெறத் தேர்வு செய்யப்பட்டு ரூ. 58,000 மதிப்பீட்டில் கையிறைப்பான்கள் பொருத்தப்பட்ட இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது வழங்கப்பட்டு வரும் குடிநீர் அவ்வூருக்குப் போது மானதாகும்.

நல்லூர் பேரூராட்சியில் சோனூர்புதூர் என்னும் குடியிருப்பு வகை 6-ன் கீழ் அமைந்துள்ளது. தற்போது, இங்குள்ள திறந்த வெளிக் கிணற்றிலிருந்தும் அருகிலுள்ள விவசாயக் கிணறுகளி லிருந்தும் மக்கள் குடிநீர் எடுத்துக் கொள்கின்றனர்.

(ஆ) அதைப் போக்க அரசின் செயற் திட்டம் என்ன ?

நல்லூர் ஊராட்சி தற்போது பேரூராட்சியாக மாற்றப்பட் டுள்ளது. எனவே மேற்படி குடியிருப்புகளுக்குக் கிராமக் குடி நீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க இயலாது. இப்பேரூராட்சி யின் குடிநீர்த் திட்டத்திற்கான நிறுவனச் செலவு மற்றும் வரு டாந்திர பராமரிப்புச் செலவு ஆகியவற்றைப் பேரூராட்சியே ஏற்றுக் கொள்ளும் வகையில் முன் மொழிவுகள் பெறப்பட்டால் அதனைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.